செய்தி வெளியீடு எண்:020　　　　　　　　　　　　　　　　　நாள்: 08.01.2020

**<u>செய்தி வெளியீடு</u>**

ஜனவரி 12 – ஆம் தேதி, தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, சென்னை – 32, கிண்டியில் இயங்கி வரும் மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் பல்வேறு போட்டிகள், ஜனவரி – 13 ஆம் தேதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

போட்டிகளின் விவரம் பின்வருமாறு :

1) பேச்சுப்போட்டி – பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் 5 நிமிடங்களுக்கு மிகாமல் பேச வேண்டும்.

- இளைஞர்களின் தன்னம்பிக்கை நட்சத்திரம் – சுவாமி விவேகானந்தர்
- அறம் செய விரும்பு
- வெற்றிகளின் தாய் – 'நேர மேலாண்மை'
- எனக்கு பிடித்த தலைவர்
- சுற்றுச்சூழல் மேம்பாட்டில் இளைஞர்களின் பங்கு

2) கட்டுரைப் போட்டி – பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் 5 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும்.

- இந்திய கலாச்சாரம்– இணையில்லா கலாச்சாரம்
- கேடில் விழுச்செல்வம் கல்வி
- அப்துல் கலாம் என்னும் அரிய மனிதர்
- பெண்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம்
- நீரின்றி அமையாது உலகு.

3) திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி – பின்வரும் அதிகாரங்களில் ஏதேனும் ஒரு அதிகாரம், போட்டியின் போது கேட்கப்படும்.

- அன்புடைமை
- அடக்கமுடைமை
- ஒழுக்கமுடைமை
- பொறையுடைமை
- அருளுடைமை
- அறிவுடைமை
- ஊக்கம் உடைமை
- ஆள்வினை உடைமை
- பண்புடைமை
- நாணுடைமை

மேற்கண்ட மூன்று பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களைப் பிடிக்கும் மாணவர்களுக்கு பின்வருமாறு பரிசுகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ.2,000 மதிப்பிலான புத்தகங்கள் |
| இரண்டாம் பரிசு | – | ரூ.1,500 மதிப்பிலான புத்தகங்கள் |
| மூன்றாம் பரிசு | – | ரூ.1,000 மதிப்பிலான புத்தகங்கள் |

இப்போட்டிகளில் 18 முதல் 25 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் பங்கு பெறலாம். இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள விரும்பும் இளைஞர்கள், அன்றைய தினத்தன்று கீழ்க்கண்ட முகவரியில் காலை 9.00 மணி அளவில் நேரில் வருகை புரியுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

<u>முகவரி மற்றும் தொலைபேசி எண் :</u>

மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
A28 , முதல் தளம், டான்சி கார்ப்பரேட் தலைமை அலுவலகம்,
கிண்டி, சென்னை – 32.
Ph No: 044 - 22500134

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**